# ***Volume - 10***

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

**(The Feast of the true sayings of God)**

**இயேசுவோடே கூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவன் இவைகளைக் கேட்ட பொழுது,**
**அவரை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம் பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான்.Luk_14:15,**

THE SCRIPTURE FEAST MINISTRIES

**REV: PAUL BENJAMIN**
FOUNDER AND AUTHOR

**REGD OFFICE:**
NO:104, EXTN 7 , MAHA LAKSHMI NAGAR, NANDIVARAM,
GUDUVANCHERY, KANCHIPURAM DIST CHENNAI 603 202 .
TAMIL NADU, SOUTH INDIA .

Mobile : + 91 94456 35860

Email : info@scripturefeast.net, www: scripturefeast.net

**FOREWORD**

**PASTOR : A. THOMAS RAJ**

PRESIDENT, APOSTOLIC CHRISTIAN ASSEMBLY

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

## (The Feast of the true sayings of God)

1. பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையிலானவைகள்
2. பல ஆங்கில பதிப்பு வேதாகமத்துடன் ஒப்பிடக்கூடியவைகள்
3. தேவ நாமத்துடன் பல தேவ தரிசனங்கள் ஒருங்கிணைக்கப் பட்டவைகள்.
4. பெரிய மதங்களையும் அதன் உட்பிரிவுகளையும் உள்ளடக் கியவைகள்.
5. வேதத்தின் அடிப்படை உபதேசங்களை அஸ்திபாரமாகக் கொண்டவைகள்
6. மெய்யான தேவ ஞானத்தை எளிமையாக கற்றுக் கொள்ளும் வழி முறைகள்.
7. தேவனால் முன் குறிக்கப்பட்டவர்களுக்கு ஜெயங்கொள்ளு வதற்காக தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து.
8. வேதாகம மையக்கருத்துக்கள் அதன் இணையான தேவ வார்த்தைகளுடன் இரண்டறக் கலப்பவைகள்.




@ One among the 1000 generation
The Bride in 1000 years kingdom

# பொருளடக்கம்

## தலைப்பு பத்து

## இந்த மனுஷக்குமாரன் யார்?


1. மதிப்புரை / Foreword
2. முன்னுரை
3. ஆசிரியர் உரை
4. இந்த மனுஷக்குமாரன் யார்?
5. மனுஷக்குமாரன் பரலோகத்திலிருந்து இறங்கி மீண்டும் பரலோகத்திற்கு எறியவர்.
6. மனுஷக்குமாரனின் மரணம்
7. மனுஷக்குமாரன் உயர்த்தப்பட வேண்டும்.
8. மனுஷக்குமாரனின் உயிர்தெழுதல்
9. லோத்தின் நாட்களில் நடந்தது போல மனுஷக்குமாரன் வரும் நாட்களிலும் நடக்கும்.
10. மனுஷக்குமாரனின் வருகையில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் பங்கு
11. மனுஷக்குமாரனின் இராஜ்ஜியம்
12 முடிவுரை

# மதிப்புரை / Foreword

*JESUS NEVER FAILS*
*"TO MAKE READY A PEOPLE PREPARED FOR THE LORD"*

## APOSTOLIC CHRISTIAN ASSEMBLY

'Speak evil no man (Titus 3:2)' (Regd.No. 80 of 1957) 'Follow peace with all men (Heb. 12.14**)'**

**Founder : Pastor G. SUNDRAM** **Chief Pastor : M.K.SAM SUNDARAM**

**Pastor . A. THOMASRAJ**
President

**G.SUKUMAR SAMUEL**
Hon.secretary

**K.R. SELWIN**
Treasurer

*The grass withers, the flower fades,*
*But the word of our God stands forever. " Isa. 40:8*

The Word of God is blameless, faultless, without defect, deserving no censure. And the Word of God has to be Preached to all People. All over the Earth with conviction and clarity for the edification of the hearers.

Careful study and meditation of the Scriptures when undertaken with the grace of God depending on the Holy Spirit's guidance will bring hidden truths to light.

The work and efforts of Bro. Paul Benjamin in this regard is commendable. I appreciate his passionate toil in the Lord's Kingdom. My prayers are that his teaching and writing will profit and prepare many for the coming of our Lord and savior Jesus Christ. Amen.

Pastor A. Thomasraj
President
Apostolic Christian Assembly

No. 26. Shanmugarayan Street, Purasawalkam, Chennai – 600 007. ☎ : 26622775/ 26635583
Email :- info@acapryaerhouse.org, Web site : www. acaprayerhouse.org

# முன்னுரை

மனிதன் மாம்ச சரீரத்தில் வாழ்வதற்கு அவனுக்கு காற்று, தண்ணீர், போஜனம், வஸ்திரம், குடியிருப்பு எப்படி ஒவ்வொருவருக்கும் அடிப்படை முக்கியமான தேவைகளோ; அது போலவே ஆவிக்குரிய மனிதன் வாழ்வதற்கு இந்த ஐந்து அடிப்படை தேவைகள் ஆவிக்குரிய நிலையில் தேவனுடைய வார்த்தைகளின் மூலம் மிக முக்கியமானது. இவைகளை உள்ளான ஆவிக்குரிய மனிதனின் ஐந்து ஆவிக்குரிய அடிப்படை தேவைகளை; புறம்பான மனிதனின் ஐந்து அடிப்படை தேவைகளோடு ஒப்பிட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| மாம்ச சரீரத்தின் தேவைகள் | | ஆவிக்குரிய சரீரத்தின் தேவைகள் |
|---|---|---|
| ஜீவ சுவாசம் | 1 | பரிசுத்த ஆவி |
| தண்ணீர் | 2 | நித்திய ஜீவத்தண்ணீர் |
| போஜனம் | 3 | நித்திய ஜீவ வார்த்தைகளின் போஜனம் |
| வஸ்திரம் | 4 | நீதியின் வஸ்திரம் |
| குடியிருப்பு | 5 | பரலோக வாசஸ்தலம் |

இவைகளை உட்கொள்ளும் அளவு அவரவர் தன்மைக் கேற்றபடி மாறுபடுகிறது. இந்த ஐந்து தேவைகள் குறையும்போதோ, அல்லது தேவைப்படும் போதோ, சரீரமானது இவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது. எப்படி மாம்ச சரீரம் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறதோ, அது போலவே ஆவிக்குரிய சரீரமும் இவைகளை ஆவிக்குரிய நிலையில் அவரவர் தன்மைக்கேற்றபடி பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது.

மனச்சாட்சியை தேவன் மனிதனுக்கு கொடுத்து அதன் மூலம் எப்பொழுது வேண்டுமானாலும் அவன் தேவனுடன் ஆவியில் தொடர்பு கொண்டு தன்னுடைய ஆத்துமாவின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம், மேலும் இவைகளுக்காக மனச்சாட்சியில்

அறிவு, புத்தி, ஞானம் இவைகளை தேவன் மனிதனுக்கு அளவில்லா மல் கொடுத்திருக்கிறார். ஒருவன் தன் ஆத்துமாவின் தேவைகளை சந்திக்கும்படி நீண்ட தூரம் பயணம் செய்யவோ அல்லது மிக கடினமாக வேலை செய்யவோ தேவையில்லை. Rom_2:11-16

ஆத்துமாக்களின் பிதாவாகிய தேவன் மனிதனுக்கு மிக அருகிலும் மிக எளிமையாகவும் தன் ஆத்துமாவின் தேவைகளை சந் திக்கும்படி தேவ வார்த்தைகளை தேவன் நமது இருதயத்திற்கும் வாய்க்கும் சமீபமாக வைத்திருக்கிறார். Rom_10:5-10, Deu_30:11-14, Jer_23:23-24, Act_17:24-28,Rom_1:19-20

மனச்சாட்சியில் தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள் வது பொதுவான இரட்சிப்பு, மேலும் இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை ஏற்றுக் கொள்வது விசேஷ இரட்சிப்பு. 2Pe_1:1, Jud_1:3, Eph_1:1, 1Pe_1:1, Tit_1:1,

## விசேஷ இரட்சிப்பின் ஆவிக்குரிய நிலமைகள்

1. ஜலத்தினால் மறுபடியும் பிறப்பு :-
தேவனுடைய வார்த்தைகளினால் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்தை விசுவாசக் கண்களால் பார்ப்பது. Joh_3:3

2. ஆவியினால் மறுபடியும் பிறப்பு :-
தேவனுடைய வார்த்தைகளினாலும் பரிசுத்த ஆவியினாலும் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்ளே விசுவாசக் கண்களால் பிரவேசிப்பது. Joh_3:5,

3. மறுபடியும் பிறந்தவர்களுக்கு களங்கமில்லாத ஞானப்பால்:- 1Pe_2:2-3, மறுபடியும் பிறந்தவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சியடைய கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்கள்.

4. பலமான ஆகாரம் :- Heb_5:12-14, தீமையை வெறுத்து, நன் மையை அறிந்து கொள்ளும் அறிவில் பூரண வளர்ச்சியடைந்து நீதியின் வசனத்தை பகுத்தறியும் ஞானத்தை அடைதல்.

5. பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள் :- Mat_13:10-15, உவமைகளின் இரகசியங்களை அறிந்து கொள்ளுவதினால் தேவ னுடைய இராஜ்ஜியத்தில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவ சித் தத்தை / பங்களிப்பை அறிந்து கொள்ளுதல்.

6. தங்களுடைய விசுவாச உடன்படிக்கையில் நிலைத்திருந்து முன் னேறும் போது அவர்கள் பரலோக இராஜ்ஜியத்தில் தேவனுடைய சித் தத்தையும் அதன் விசுவாச அளவுப் பிரமாணத்தையும் அறிந்து கொண்டு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல் Rev_3:20-22

7. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து :- Rev_19:1-9 இயேசு கிறிஸ்து, இராஜாவாக முடிசூடப்படும் பட்டாபிஷேக விழா வில் கலந்து கொண்டு தேவனுடைய சத்தியமான வசனங்களை விருந்தாக புசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆட்சியின் பதவியை பரிசாகப்பெற்று, அல்லேலூயா என்று கெம்பீர சத்தத்தோடு ஆரவாரம் செய்து தேவனை மகிமைப்படுத்துதல்.

8. மரணத்தை ஜெயமாக விழுங்குதல் :- 1Co_15:50-54, 1Co_11:23-30, Joh_6:27-28 தேவனுடைய சத்தியமான நித்திய ஜீவ வசனங்களின் அறிவில் மறு ரூபமடைந்து அதன் கிரியைகளின் மூலம் அழிவுள்ளது அழியாமை யையும் சாவுள்ளது சாவாமையும் தரித்துக் கொள்ளும் போது மரணம் ஜெயமாக விழுங்கப்படும்.
பொதுவான இரட்சிப்பும் மற்றும் விசேஷ இரட்சிப்பின் வளர்ச்சிப் படிகளும் மிக எளிமையான முறையில் தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டு புரிந்து கொள் ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய கிருபை யினால் இந்த தேவனுடைய சத்தியமான வசனங்களின் விருந்தை பல ஆங்கில மொழிப் பதிப்பு வேதாகமங்களுடனும் மற்றும் அவரவர்

சொந்த தாய்மொழி வேதாகமங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்க்க தரிசன வசனங்களின்படி ஜலத்தினால் சமுத்திரம் நிறைந்திருப்பது போல பூமி கர்த்தரைக் குறித்து அறிகிற அறிவால் நிறைந்திருக்கும் என கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். Hab_2:14, Isa_11:9

இந்த தீர்க்க தரிசன வசனத்தின் படி இந்த வசனங்களை வாசிக்கிறவன், கேட்கிறவன் இதில் எழுதியுள்ளவற்றை கைக்கொள்கிறவன் பாக்கியவான். இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி ஏற்கனவே உங் களுக்கு அறிவிக்கப்பட்ட தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டே மீண்டும் இவைகள் இப்பொழுது; பத்து தேவனுடைய வார்த்தைகளின் தலைப்புக்களின் மூலம் விவரிக்கப்பட்டு, உங்களுக்கு அறிவிக் கப்பட்டு வருகிறது. Rev_1:3. 1Pe_1:10-13

இந்த தீர்க்கதரிசன வசனத்தின்படி பொதுவான இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் எழுதும்போது, பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைக்குறித்து எழுதுவது நலமாக கண்டது இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி தங்களது பெயர் பூமியில் எழுதப்படாமலும், ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்ட பெயர் அழிக்கப்படாமலும், ஞாபக புஸ்தகத்தில் பெயர் எழுதப்படும் படியாகவும் இவைகளை மீண்டும் ஞாபகப் படுத்திக்கொள்வோம் ஆமென்.
Jud_1:3, Jer_17:13,Exo_32:33, Psa_69:28, Mal_3:16,

# ஆசிரியர் உரை

மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் இராஜாவாக வெளிப் படப்போகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எங்களின் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் உள்ள விசுவாசத்தில் தங்களுடைய முழு நம்பிக்கையையும் வைத்து, அவருடன் விசுவாச உடன்படிக்கை செய்து, அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களையும் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து அவர் இராஜாவாக முடிசூட்டப்படும் தன்னுடைய பட்டாபிஷேக விழாவிற்கு அழைத்து அவர்களுக்கு தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாகக் கொடுத்து, அவர்களின் கிரியை களின்படி பிரதிபலனை பரிசாக அளிக்கிறார்.

இந்த நற்செய்தியை தேவனுடைய தரிசனமாகவும், அழைப் பிதழாகவும் எழுதி அனுப்பி இதன் பயனாக தேவனால் முன் குறிக் கப்பட்ட பரிசுத்தவான்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு உத்தமமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும் ஊழியத்தை செய்கிறவர்களாக, இந்த தலைமுறையில் எழும்பும்படி நாங்கள் தரிசனம் நிறைவேற ஜெபத்துடன் ஊழியம் செய்து கொண்டு வருகிறோம். தேவ வார்த்தைகளை கண்டு, கேட்டு, உணர்ந்து கொண்டபடியால்; தேவன் எனக்கு பகிர்ந்த விசுவாச அளவின்படி தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக மனம் புதிதாகிற தினாலே ஆவியில் மறுரூபம் அடைந்து தேவ தரிசனத்தைப் பெற்றேன்.

**தரிசனம் :-** கர்த்தர் எனக்கு பிரதியுத்திரமாக : நீ தரிசனத்தை எழுதி, அதை கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகையிலே தீர்க்க மாக வரை.

**எழுத்தின்படி பொருள் :-** காகிதம், தோல்சுருள், கற்பலகை உலோகத்தினாலான பலகை இவைகளில் தேவ தரிசரினத்தை எழுதி அறிவிப்பது.

**ஆவியின்படி பொருள் :-** தேவ வார்த்தைகளை வாசிப்பது, கேட்பது, ஆலோசனையாக ஏற்றுக்கொள்வது, விசேஷ பயிற்சிகளி னால் உணர்ந்து கொள்ளுவது ஆகியவற்றின் மூலம் சதையாகிய இருதயப்பலகையின் மேல் தேவ தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

**ஞான அர்த்தத்தின்படி பொருள் :-** கணினியின் கடந்தோடு கிற திரையில் தரிசனத்தை வாசிக்கும்படி கணினியின் விசைப்பலகை யிலே தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

தரிசனத்தை மிக சுருக்கமாகவும், வெளிப்படையாகவும், வேதத்தில் உள்ளபடி அவரவர் கேட்டறியும் அளவிற்கேற்றபடி எழுதி, அவைகளை எழுத்தின்படி, ஆவியின் படி, ஞான அர்த்தத்தின்படி ஆகிய மூன்று வழிகளிலும் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தில் பங்கடையும்படி அழைப் பிதழ்களை அனுப்பும் இந்த ஊழியத்திற்காக தேவைகள் அநேகம் உண்டு.

இப்படிப்பட்ட பல கிருபை வரங்கள், ஊழியதரிசனங்கள் மற்றும் பல ஆசீர்வாதங்கள், தேவனுடைய சித்தத்தின்படி கிறிஸ்து வின் அவயவங்களான நமக்கு தேவ ஆவியானவர் பகிர்ந்து கொடுத் திருக்கிறார்.

கிறிஸ்துவாகிய தலையைப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவின் அவயவமான எங்கள் ஊழியம் அதன் முழு பெலத்துடன் பொரு ளாதார ஆசீர்வாதங்களை பெற்று செயல்பட முயற்சி செய்து பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. மற்ற கிறிஸ்துவின் அவயவங்களான நீங்களும் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல எங்களுக்கு உதவி செய்யும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தேவன் பகிர்ந்து கொடுத்த சித்தத்தை நிறைவேற்றும்படி கிறிஸ்துவின் அவயங்களை இசைவாகக்கூட்டி இணைக்கப்பட்டு ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவிற்குத்தக்கதாக கிரியைகளை செய்யும் போது; அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாகு வதற்கேதுவான முழு சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. இப்படி ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறை வேற்றி தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம்.

அல்லேலூயா, ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
உங்கள் சகோதரன்

# தலைப்பு பத்து

# இந்த மனுஷக்குமாரன் யார்?

### 1. இந்த மனுஷக்குமாரன் யார்?

தேவனுடைய ரூபத்திலும், சாயலிலும் மரித்த ஆதாமின் சந்ததிகள், மீண்டும் தேவனுடைய ரூபத்தையும், சாயலையும் பெற்றுக்கொள்ளுவதற்காக; பரலோகத்திலிருக்கிற தேவனுடைய ரூபமும் சாயலுமான நித்திய ஜீவ வார்த்தையை, இரண்டாம் ஆதாமாகிய மனுஷக்குமாரன் என்ற பெயரில் இந்த பூமிக்கு தேவனா ல் அனுப்பப்பட்டவர்.

Joh_12:34-36, Joh_1:1-14, Joh_9:35-41, 1Jo_1:1-3, Joh_8:12-14, Joh_12:44-50, Joh_10:32-38, 2Pe_1:17-19, Mat_4:15, Isa_50:10-11, Pro_6:23, Psa_119:105, 2Co_4:4-6,

**கிறிஸ்து யாருடைய குமாரன்?**

மாம்சத்தின்படி தாவீதின் குமாரன். ஆவியின்படி தேவனுடைய ஒரே பேரான குமாரனமாகிய கிறிஸ்து.

Mat_22:41-46, Mat_12:35-37, Joh_8:53-59,

மனுஷக்குமாரனை ஜனங்கள் யார்? என்று சொல்லுகிறார்கள்?

1. ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து 2.போஜனப்பிரியன், 3. மதுபானப்பிரியன், 4. ஆயக்காரனின் சிநேகிதன், 5. பாவிகளின் சிநேகிதன், 6. ஜனங்களை வஞ்சிக்கிற வன் 7. சமாரியன், 8. பிசாசு பிடித்தவன், 9. தீர்க்க தரிசிகளில் ஒருவர்,

10. யோவான் ஸ்நானகன், 11. எலியா தீர்க்கதரிசி, 12. எரேமியா தீர்க்கதரிசி

Mat_16:13-20, Mar_8:27-31, Luk_9:18-22, Joh_6:68-69, Joh_8:45-53, Luk_7:34-35, Joh_10:20-31, Joh_7:12,

2. மனுஷனுக்குமாரன் பரலோகத்திலிருகிறவர்
மனுஷனுக்குமாரன் பரலோகத்திலிருந்து இறங்கியவர்
மனுஷனுக்குமாரன் மீண்டும் பரலோகத்திற்கு எறியவர்.

Joh_3:12-16, Joh_3:17-21, Joh_3:31-36, Joh_8:23-30, Joh_8:38-44, Joh_8:53-59, Joh_6:26-33, Joh_6:34-40, Joh_6:41-51, Joh_6:52-58, Joh_6:59-71, Eph_4:7-10, 1Sa_2:6, 1Pe_3:17-20, Rom_10:6-8, Deu_30:11-14,

## 3. மனுஷக்குமாரனின் மரணம்

தேவனிடமிருந்து மனிதனுக்கு வெளிப்பட்ட கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை, பிரதான ஆசாரியர்கள் / வேதபாரகர்கள் / பரிசேயர்கள் சதுசேயர்கள் / தேவாலய அதிகாரிகள் ஆகிய இவர்களால் சிலுவையில் அடித்து கொலை செய்வது /சீர்குலைப்பது / பொருளை மாற்றுவது மனுஷக்குமாரனின் மரணம்.

Mat_20:17-19, Mat_26:2-5, Mat_26:21-29, Mat_26:45-50, Mat_26:51-57, Mar_8:31, Mar_9:31, Mar_10:33-34, Mar_14:18-25, Mar_14:41-46, Luk_9:22, Luk_9:44, Luk_18:31-33, Luk_24:7, Luk_24:20, Heb_6:4-8, Rev_11:3-13, Joh_11:46-53,

## 4. மனுஷக்குமாரன் உயர்த்தப்பட வேண்டும்

பழைய ஏற்பாட்டு ஜனங்கள் சரீர ஜீவனில் பிழைப்பதற்காக மோசேயினால் வனாந்தரத்தில் உயர்த்தப்பட்ட வெங்கல சர்ப்பம்

போல, புதிய ஏற்பாடு ஜனங்கள் நித்திய ஜீவனை அடைந்து, ஆவி ஆத்துமாவில் பிழைக்கும்படி மனுஷக்குமாரனும், மோசேயினுடைய ஆசனத்தில் வீற்றிருப்பவர்களால் சிலுவையில் அடித்து உயர்த்தப்பட வேண்டும். Joh_3:12-16,

பழைய ஏற்பாட்டு ஜனங்கள், சரீர ஜீவனில் பிழைப்பதற்காக மோசேயினால் வனாந்தரத்தில் உயர்த்தப்பட்ட வெங்கல சர்ப்பம்

4-1. தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாக பேசினபோது, சர்ப்பத்தால் கடிபட்டவர்கள் சரீர ஜீவனில் பிழைக்கும்படி மேசேயினால் வனாந்தரத்தில் வெங்கல சர்ப்பம் உயர்த்தப்பட்டது. Num_21:5-8,

மோசேயினால் வெங்கல சர்ப்பம் உயர்த்தப்பட்டது போல மனுஷக்குமாரனும் / கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளும் கொலை செய்யப்பட்டு உயர்த்தப்பட வேண்டும் / மற்றவர்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும்.

Joh_3:12-6,Joh_8:28,Joh_12:32-34,

பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட நித்திய ஜீவ வார்த்தை களை கொலை செய்து, அதன் பொருளை சீங்குலைத்து, தங்களுடைய சுய ஆலோசனைகளுக் கேற்றபடி மாற்றியமைத்துக் கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு சுய மகிமையைத் தேடிக் கொண்டு; தங்களுடைய சுய வெளிப்பாடுகளையும் தரிசனங்களையும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டும்போது அல்லது கொலை செய்யப்பட்ட தேவனுடைய வார்த்தைகளை உயர்த்திக் காட்டும் போது; அவர்கள் மறைமுகமாக தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளை எப்படி? கொலை செய்திருக்கிறார்கள் என்பதையும் வெளிப்படுத்துகிறார்கள் / உயர்த்திக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

4-2. தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாக பேசினபோது, சர்ப்பத்தால் கடிபட்டவர்கள் மோசேயினால் உயர்த்தப்பட்ட வெங்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்து சரீர ஜீவனில் பிழைத்தார்கள்.

Num_21:9, வெங்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்து சரீர ஜீவனில் பிழைக்கிறது போல, மனுஷக் குமாரனை நோக்கிப் பார்க்கும்போது, ஆவி ஆத்துமாவும் நித்திய ஜீவனில் பிழைக்கிறது.

பாவத்தினால் ஆவி, ஆத்துமாவில் மரித்தவர்கள் தங்களுடைய ஆவி, ஆத்துமா, பிழைப்பதற்காக கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை நோக்கிப் பார்க்கும்போது, அவைகள் சிலுவையில் அறையப்பட்டு உயர்த்தப்பட்டிருக்கிறது / வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது; இந்த நிலையிலும் கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளை ஆராய்ந்து தேடி தங்களுடைய ஆவி, ஆத்துமாவை பிழைக்க வைக்க முயற்சி செய்து போராடிக்கொண்டிருப்பவர்களில் சிலர்; நித்திய ஜீவ வார்த்தைகளை ஏன் ? எப்படி ? எதற்காக ? யார் ? இப்படி சிலுவையில் அறைந்து கொலை செய்திருக்கிறார்கள் என்பதை பகுத்தாராய்ந்து உணர்ந்து கொள்ளுகிறவர்கள் மட்டும், நித்திய ஜீவவார்த்தைகளின் பொருளை அறிந்துகொண்டு, தங்கள் ஆவி, ஆத்துமாவில் நித்திய ஜீவனை அடைந்து பிழைக்கிறார்கள்.

4-3. தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாக பேசினபோது சர்ப்பத்தால் கடிபட்டிடவர்கள் சரீர ஜீவனில் பிழைப்பதற்காக மோசேயினால் உயர்த்தப்பட்ட வெங்கலசர்ப்பம், காலப்போக்கில் தூபம் காட்டும் விக்கிரகமாக மாறினது

மோசேயினால் உயர்த்தப்பட்ட வெங்கல சர்ப்பம் தூபம் காட்டும் விக்கிரமாக மாறுகிறது போல  சிலுவையில் அடித்து உயர்த்தப்பட்ட கிறிஸ்துவின் சரீரமும் தூபம் காட்டும் விக்கிரமாக மாறுகிறது. 2Ki_18:4-5,

மோசேயினால் உயர்த்தப்பட்ட வெங்கல சர்ப்பம் காலப்போக்கில் தூபம் காட்டும் விக்கிரமாக மாறினது போல, மோசேயினுடைய ஆசனத்தில் வீற்றிருப்பவர்களால் சிலுவையில் அடித்து உயர்த்தப்பட்ட கிறிஸ்துவின் சரீரமும் காலப்போக்கில் தூபம் காட்டும் விக்கிரமாக மாற்றப்படுகிறது; இதனால் கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் கிடைக்கும் இரட்சிப்பு பாழக்கப்பட்டு, அருவருப்பாகிக் கொண்டிருக்கிறது.

பாவத்தினால் ஆவி, ஆத்துமாவில் மரித்தவர்கள் தங்களுடைய ஆவி, ஆத்துமா, பிழைப்பதற்காக கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை நோக்கிப் பார்க்கும்போது, அவைகள் சிலுவையில் அறைந்து கொலை செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து உணர்ந்து கொள்ளாதவர்கள், அந்த கொலை செய்யப்பட்டிருக்கிற நிலையின் மூலமாகவே, தங்களுடைய ஆவி, ஆத்துமாவை பிழைக்க வைக்க முயற்சி செய்கிறார்கள்; இப்பொழுது இவர்களுடைய ஆவி, ஆத்துமா தொடர்ந்து மரணத்திலே நிலைகொண்டிருக்கிறது, மேலும் இவர்களுடைய இந்த முயற்சி வெங்கல சர்ப்பத்திற்கு தூபம் காட்டி விக்கிரகாரதனை செய்தது போல சிலுவையில் உயர்த்தப்பட்ட கிறிஸ்துவின் சரீரத்திற்கும் தூபம் காட்டி விக்கிரகாரதனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

Mat_24:15, Mar_13:14 Dan_11:31-35, Dan_12:11,

இந்த விக்கிரகம் நிற்கத்தகாத பரிசுத்த ஸ்தலத்தில் நின்று கொண்டிருந்து, ஆவி, ஆத்துமாவின் இரட்சிப்பை பாழக்கி, அருவருப்பாக்கிக் கொண்டிருக்கிறது.

### 5. மனுஷக் குமாரனின் உயிர்தெழுதல்.

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்தைகளின் உயிர்தெழுதல்.

Joh_5:21-23, Joh_5:24-29, Joh_11:25-27,

கிறிஸ்துவின் முதல் வருகையிலிருந்து 2000 ஆண்டுகளுக்கு பின்பு கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் உயிர் தெழுதல் நடைபெறுகிறது. Mat_27:63, Mar_10:32-34, Luk_24:7, , Hos_6:1-3, Psa_90:4, 2Pe_3:8,

முதலாம் ஆதாமின் வருகையிலிருந்து 6000 ஆண்டுகளுக்கு பின்பு, கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் உயிர்தெழுதல் நடைபெறுகிறது. Mat_17:1-9, Mar_9:2-12,

எருசலேமாகிய கர்த்தருடைய வார்த்தைகளிலும் சீயோனாகிய தேவனுடைய வேதத்திலும் காத்திருப்பவர்கள், முன்மாரி, பின்மாரி, மழையின் ஆசீர்வாதங்களைப் பெற்று, கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் உயிர்தெழுதலுக்கு சாட்சிகளாக மாறுகிறார்கள். Luk_24:47-53,Act_1:4-5, Act_1:12, Act_1:8,Isa_2:1-6, Mic_4:1-3, Jer_50:4-8, Zec_8:21-23, Zec_10:1-5,

## 6. லோத்தின் நாட்களில் நடந்தது போல மனுஷக்குமாரன் வரும் நாட்களிலும் நடக்கும்.

6-1 லோத்தின் நாட்களில் புசித்துக் குடித்தார்கள்.

6-2 லோத்தின் நாட்களில் பெண் கொண்டு பெண் கொடுத்தார்கள்.

6-3 லோத்தின் நாட்களில் கொண்டார்கள் விற்றார்கள்.

6-4 லோத்தின் நாட்களில் நட்டார்கள்.

6-5 லோத்தின் நாட்களில் கட்டினார்கள்.

6-6 சோதோமிலிருந்து லோத்தை தேவன் நீதிமானாக அடையாளம் கண்டு தெரிந்துகொள்ளுதல்.

6-7 லோத்தின் வீட்டை சூழ்ந்து கொண்ட சோதோமின் ஜனங்கள்.

6-8 லோத்து தன்னுடையவர்களை இரட்சித்துக் கொள்ள முயற்சி செய்தல்.

6-9 லோத்தின் வீட்டார் சோதோமிலிருந்து இரட்சிக்கப்படுதல்

6-10 லோத்தின் மனைவி பின்னிட்டு திரும்பி உப்பு தூணாக மாறுதல்

6-11 தகப்பானலே பிள்ளைகளை பெற்ற லோத்தின் மகள்கள்

6-12 மோவாப் தேசத்தின் குடிகளுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு

**லோத்தின் நாட்களில் நடந்தது போல மனுஷக்குமாரன் வரும் நாட்களிலும் நடக்கும்**

6-1 லோத்தின் நாட்களில் புசித்துக் குடித்தார்கள் :-

எழுத்தின்படி புசித்துக்குடித்து விருந்து கொண்டாடினார்கள்.

6-2 லோத்தின் நாட்களில் பெண் கொண்டு பெண் கொடுத்தார்கள்:-

எழுத்தின்படி பெண் எடுத்து, பெண் கொடுத்து திருமண விழாக்கள் நடைபெற்றது.

6-3 லோத்தின் நாட்களில் கொண்டார்கள், விற்றார்கள் :-

எழுத்தின்படி நிலம் பொருள்களை விற்று, வாங்கி தங்கள் வியாபாரங்களை செய்தார்கள்.

6-4 லோத்தின் நாட்களில் நட்டார்கள்:-

எழுத்தின்படி நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் தோட்டங்கள், தோப்புகள் ஆகியவைகளை நிறுவினார்கள்.

6-5 லோத்தின் நாட்களில் கட்டினார்கள்:-

எழுத்தின்படி கட்டிடங்கள், பாலங்கள் புதிய திட்டங்கள் ஆவியவைகளை கட்டினார்கள். Luk_17:28-30,

6-6 சோதோமிலிருந்த லோத்தை, தேவன் நீதிமானாக அடையாளம் கண்டு தெரிந்துகொள்ளுதலின் பொருள் எழுத்தின் படி:-

லோத்து, சோதோமின் அக்கிரமக் கிரியைகளைக் கண்டு கேட்டு, நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட படியால், இருதயங்களை சோதித்து அறிகிற தேவன், லோத்தை சோதோமிலிருந்து நீதிமானாக அடையாளம் கண்டு பிரித்தெடுத்தார்

Gen_19:6-10, 2Pe_2:6-10,

லோத்தை போல உள்ள நீதிமான்களை தேவன் அடையாளம் கண்டு தெரிந்துகொள்ளுதலின் பொருள் ஆவியின்படி :-

ஞானர்தமாக சோதோம் என்றும் எகிப்து என்றும் சொல்லப் படும் எருசலேமின் கள்ள தீர்க்கதரிசிகளின் நடுவிலிருந்து, தேவன் நீதிமான்களை அடையாளம் போட்டு பிரித்தெடுப்பது.

ஞானர்தமாக சோதோம் என்றும் எகிப்து என்றும் சொல்லப்படும், எருசசேலம் நகர தேவாலாயத்தின் பரிசுத்த ஸ்தலத்தில், கள்ளத் தீர்க்கதரிசிகளின் மூலம் நடைபெறும் அக்கிரமக் கிரியைகளைக் கண்டு, கேட்டு, லோத்தைப்போல தங்கள் இருதயத்தில் வாதிக்கப்பட்டு, பெருமூச்சு விட்டழுகிறவர்களை, தேவாலாயத்தின் பரிசுத்த ஸ்தலத்திலே, தேவன் தம்முடைய முத்திரை அடையாளங்களை போட்டு, நீதிமான்களாக பிரித்தெடுக்கிறார்; இப்படிபட்ட நீதிமான்கள் 1,44,000 பேர் வரிசையில் வந்து சேர்ந்து பரிசுத்தவான்களின் ஊழிய அழைப்பை நிறைவேற்றுகிற கிறிஸ்துவின் மண வாட்டி சபையாக மாறுகிறார்கள்.

Rev_11:8 Jer_23:14-17, Eze_9:4, Zep_3:18,

தேவனுடைய வார்த்தைகளை தங்கள் வாய்க்கு மட்டும் சமீபமாக வைத்துக்கொண்டிருந்து; தங்கள் இருதயத்திற்கு தேவனுடைய வார்த்தைகள் தூரமாயிருகிற அவபக்தியுள்ள துன்மார்கரான கள்ளத்தீர்க்க தரிசிகளை தேவன் நியாயத்தீர்ப்பிற்கு நியமிக்கிறார்.

2Pe_2:6-10, Isa_29:13, Jer_12:2, Eze_30:30-31, Isa_58:1-2,

Isa_48:1-2, Hos_8:1-4, Nah_1:7, Tit_1:16, Amo_5:14,

6-7-0 லோத்தின் வீட்டைச் சூழ்ந்து கொண்ட சோதோமின் ஜனங்கள்:-

6-7-1. சோதோம் கொமோராவின் பாவத்தின் நிமித்தம் தேவ தூதர்கள்கள் அதை அழிப்பதற்கு முன்பு அதிலிருந்து நீதிமான்களை அடையாளம் கண்டு அவர்களை பிரித்தெடுக்கும்போது; சோதோமின் வாலிபர் முதல் கிழவர் மட்டும் நீதிமானாகிய லோத்தின் வீட்டை சூழ்ந்து கொண்டு, அவர்களை அவமானப்படுத்தவும், உபத்திரப் படுத்தவும் முயற்சி செய்து, அவர்களுடைய வீட்டை விட்டு வெளியே வரும்படி கூக்குரல் இட்டார்கள்.

**ஆவியின்படி பொருள்:-**

தேவனுடைய வார்த்தைகளை அனுதினமும் சிலுவையில் அடித்து, தினந்தோறும் தேவனுக்கு கோபமுண்டாக்குகிற கள்ள தீர்க்கதரிசிகளின் பாவத்தினிமித்தம், தேவ ஊழியர்கள் அவர்களுடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு முன்பு; தேவனுடைய கற்பனைகளை பின்பற்றுகிற நீதிமான்களை அடையாளம் கண்டு அவர்களை கள்ள தீர்க்க தரிசிகளிலிருந்து பிரித்தெடுக்கும்போது, சிறிய கள்ள தீர்க்கதரிசிகள் முதல் பிரபலமான பெரிய கள்ள தீர்க்கதரிசிகள் வரை, தேவ ஊழியர்களுக்கும் அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கிற நீதிமான்களுக்கும் விரோதமாக எழும்பி, அவர்களை அவமானப்படுத்தவும், உபத்திரவப்படுத்தவும் முயற்சி செய்து, அவர்கள் அடைக்கலமாக ஓடி வந்த தேவனுடைய கற்பனைகளையும், பிரமானங்களையும் விட்டு வெளியே வரும்படி கூக்குரல் இட்டார்கள்.

Isa_65:8, Heb_6:4-9, Eze_9:4, Mat_10:11-15, Mat_11:23-24, Mar_6:10-11, Luk_10:10-12, Jud_1:6-8, Isa_3:6-9, Isa_65:2-7,

## 6-7-2. லோத்து தேவ தூதர்களுக்காக சோதோமின் ஜனங்களோடு பரிந்து பேசுதல் :-

என்னுடைய வீட்டிற்கு அடைக்கலமாக வந்தவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம், புருஷனை அறியாத இரண்டு குமாரத்தி கள் எனக்கு உண்டு அவர்களை உங்களிடத்திற்கு வெளியே கொண்டு வருகிறேன், அவர்களுக்கு உங்கள் இஷ்டப்படி செய்யுங் கள் என்று லோத்து, தன்னுடைய வீட்டை சூழ்ந்து கொண்டவர் களிடம் சொன்னார்.

### ஆவியின்படி பொருள்:-

நான் என்னுடைய வீட்டிற்கு அடைக்கலமாக அழைத்து வந்த தேவ ஊழியர்களிடத்தில் உங்கள் கள்ள தீர்க்கதரிசன வெளிப்பாடு களைக் குறித்து, வாக்குவாதம் செய்ய வேண்டாம்; கிறிஸ்துவை அறியாத இரண்டு சபைகள் எனக்கு உண்டு; அவைகளை உங்களிடம் அழைத்து வருகிறேன், அவர்களுக்கு உங்கள் இஷ்டம் போல உங்களுடைய கள்ள தீர்க்கதரிசன வெளிப்பாடுகளை, வெளிப்படுத்திக் காட்டுங்கள்.

6-7-3. லோத்தின் வீட்டைச் சுற்றிலும் குருட்டாட்டம்

தேவ தூதர்கள் லோத்தின் வீட்டை விட்டு வெளியே வராததால், சோதோமின் ஜனங்கள் லோத்தின் வீட்டுக் கதவை உடைக்க முயற்சி செய்தார்கள், அப்பொழுது தேவ தூதர்கள் லோத்தை வீட்டுக்குள்ளே இழுத்துக் கொண்டு, கதவைப் பூட்டி தெரு வாசலிலிருக்கிற ஜனங்களுக்கு குருட்டாட்டம் பிடிக்க பண்ணினார்கள், அவர்கள் வீட்டு வாசலை தேடித் தேடி அலுத்துப் போனார்கள்.

### ஆவியின்படி பொருள்:-

தேவ ஊழியர்களும் அவர்களை பின்பற்றுகிற நீதிமான்களும், தங்களுக்கு அடைக்கலப் பட்டணமாக ஓடி வந்த தேவனுடைய கற்பனைகளையும், பிரமாணங்களையும் விட்டு வெளியே வராமல், அவைகளிலே நிலைத்திருக்கிற படியால், கள்ள தீர்க்கதரிசிகள்

எழும்பி தேவனுடைய கற்பனைகளை சீர்குலைக்க முயற்சி செய்து நீதிமான்களிடம் வாக்குவாதம் பண்ணினார்கள்; அப்பொழுது தேவ ஊழியர்கள் தங்கள் இருதயக் கதவை அடைத்துக்கொண்டு, கள்ள தீர்க்கதரிசிகளிடம் வாக்குவாதம் செய்யாமல் தங்களைக் காத்துக் கொண்டு, தங்களுடன் வாக்குவாதம் செய்த கள்ள தீர்க்க தரிசிகளுடைய தரிசனங்களில் குருட்டாட்டம் உண்டாகும்படி தேவ ஊழியர்கள் கட்டளையிட்டார்கள், அப்பொழுது கள்ள தீர்க்க தரிசிகள் தேவ ஊழியர்களுக்கு விரோதமாக எழும்பி கிரியைகளை செய்யும் வழி முறைகளை கண்டறிய முடியாமல் தோல்வியடைந்தார்கள்.

Gen_19:10-13, Exo_10:20-23, Rev_11:5-8, Isa_56:9-12, Isa_42:19-25, Isa_29:9-14,

## 6-8 லோத்து தன்னுடையவர்களை சோதோமிலிருந்து இரட்சித்துக் கொள்ள முயற்சி செய்தல் :-

தேவ தூதர்களால் நீதிமானாக அடையாளம் காணப்பட்ட லோத்து, தன்னுடைய இருதயத்திற்கேற்றவர்கள் யாராவது சோதோ மில் இருந்தால், அவர்களை தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்புவித்துக் கொள்ளுவதற்கு அழைக்கச் சென்றபோது, அவர்கள் வர மறுத்து விட்டார்கள், மேலும் அது, அவர்களுக்கு பரியாசமாக தோன்றியது.

### ஆவியின்படி பொருள்:-

கள்ளத் தீர்க்க தரிசிகளின் மத்தியில் யாராவது நீதிமான்கள் இருந்தால், அவர்களை லோத்தைப்போல உள்ள நீதிமான்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்புவித்துக் கொள்ளுவதற்காக அழைக்கச் சென்றபோது, அவர்கள் தங்களுடைய கள்ள தீர்க்க தரிசன வெளிப்பாடுகளிலிருந்து வெளியே வர மறுத்து விட்டார்கள் மேலும் அது அவர்களுக்கு பரியாசமாக தோன்றினது.

Gen_19:12-13, 2Pe_3:3-4,

## 6-9 லோத்தின் நீதியின் நிமித்தம் அவனுடைய விட்டார் சோதோமிலிருந்து இரட்சிக்கப்படுதல்:-

சோதோம் கொமோராவின் கூக்குரல் தேவனுடைய சமூகத்திற்கு வந்து எட்டினபடியால், அதை அழிப்பதற்காக தேவ தூதர்கள் சோதோம் பட்டணத்திற்கு வந்தபோது; லோத்து அவர்களை யாரோ? வழிப்போக்கர்கள் என்று அறிந்து, தன்னுடைய வீட்டிற்கு அவர்களை அழைத்து வந்து, இரவு தங்கி, அப்பம் புசித்து, மீண்டும் பயணம் செய்யும்படி அவர்களை கேட்டுக் கொண்டார். இப்படி லோத்து தேவ தூதர்களை தன்னிடம் அழைத்து உபசரித்ததால் லோத்தின் வீட்டார் சோதோமிலிருந்து இரட்சிக்கப்பட்டார்கள்.

Gen_19:1-3, Heb_13:1-2, Gen_19:29, Gen_19:20-21,

## லோத்தைப் போல உள்ள அநேக நீதிமான்களின் விட்டார் கள்ளத்தீர்க்கதரிசிகளிடமிருந்து இரட்சிக்கப்படுதல்

### ஆவியின்படி பொருள்:-

கள்ள தீர்க்க தரிசிகள் மற்றும் அவர்களைப் பின்பற்றி கள்ள திர்க்க தரிசன வெளிப்பாடுகளை நாடி ஓடுகிற ஜனங்களின் அக் கிரமங்கள், தேவனுடைய சமூகத்திற்கு வந்து எட்டினபடியால் அவர்களை அழித்து, நிக்கிரகம் பண்ணுவதற்காக தேவனால் அனுப்பப்பட்ட தேவ ஊழியர்கள், தேவ நாமம் தரிக்கப்பட்ட தேவ ஜனங்கள் மத்தியில் வருகிறபோது; அவர்களுக்குள்ளே லோத்தைப் போல உள்ள நீதிமான்கள் யாராவது, அவர்களை தேவனுடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றும் தேவ ஊழியர்கள் என்று அறியாமல், யாரோ வழிப்போக்கர்களைப் போல உள்ள தேவ ஊழியர்கள் என்று அறிந்து, அவர்களுக்கு உதவி செய்ய முன் வருகிறார்களோ, அவர் களின் விட்டார் கள்ள தீர்க்க தரிசிகளின் வஞ்சிக்கிற ஆவிகளி லிருந்து இரட்சிக்கப்படுவார்கள்.

Heb_12:1-2, Mat_25:31-39, Mat_25:40-46, Mat_10:40-42, Mar_9:41-42,

## 6-10-0 லோத்தின் மனைவி பின்னிட்டு திரும்பிப் பார்த்து உப்பு தூணாக மாறினாள்

6-10-1. லோத்தின் நீதியின் நிமித்தம் தேவ தூதர்களால் கரம் பிடிக்கப்பட்டு, தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்புவித்துக் கொள்ளுவதற்காக சோதோம் பட்டணத்திற்கு வெளியே அழைத்து வரப்பட்ட லோத்தின் மனைவி, மீண்டும் சோதோமிலுள்ள தன்னுடைய பூமிக்குரிய ஆசீர்வாதங்களை பின்னிட்டு திரும்பிப் பார்த்தபோது, அந்த இடத்திலே உப்பு தூணாக மாறினாள்.

Gen_19:15-26, Gen_19:17,

**ஆவியின்படி பொருள்:-**

லோத்தின் மனைவியைப்போல நீதிமான்களையுடைய சபை பூமிக்குரிய ஆசீர்வாதங்களை பின்னிட்டு திரும்பிப் பார்க்கிறபோது, மற்றவர்களின் பரிகாசத்திற்கு ஏதுவாக மாறுகிறது.

விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமின் நிமித்தமும், லோத்தைப்போல உள்ள நீதிமான்களின் நிமித்தமும், தேவனுடைய வார்த்தைகளால் கரம் பிடிக்கப்பட்டு, தேவனுடைய நியாயத்தீர்ப்பி லிருந்து தப்புவித்துக் கொள்ளுவதற்காக, கள்ள தீர்க்க தரிசனங் களிலிருந்து வெளியே அழைத்து வரப்பட்ட லோத்தைப்போல நீதி மான்களையுடைய சபையானது, மீண்டும் கள்ளத்தீர்க்க தரிசனங்களி னால் உண்டான பூமிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளு வதற்காக ஆவியில் பின்னிட்டு திரும்பிப் பார்க்கிறபோது அந்த இடத்திலே மற்றவர்களின் பரிகாசத்திற்கு ஏதுவாக மாறுகிறது.

6-10-2. லோத்தின் குடும்பத்தார் தங்களை அழிவிலிருந்து தப்புவித்துக் கொள்ளுவதற்காக, தேவதூதர்கள் அவர்களுக்கு கொடுத்த நான்கு தேவ ஆலோசனைகள் :- Gen_19:17,

1. உன் ஜீவன் தப்ப ஓடிப்போ

2. பின்னிட்டு பாராதே

3. இந்த சம பூமியில் எங்கும் நில்லாதே

4. நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ

**ஆவியின்படி பொருள்:-**

1. உன் ஜீவன் தப்ப ஓடிப்போ:- உன் ஆவி, ஆத்துமாவை இரட்சித்துக் கொள்ள ஓடிப்போ

2. பின்னிட்டு பாராதே:- பூமிக்குரிய ஆசீர்வாதங்களை திரும்பிப் பார்க்காதே

3. இந்த சம பூமியில் எங்கும் நில்லாதே:- ஆவிக்குரிய காரியங்களில் மற்றவர்களைப் போல இருக்காதே

4. நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ:- நீ அழிந்து போகாதபடிக்கு கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் மேலான ஆவிக்குரிய காரியங்களுக்கு ஓடிப்போ Luk_17:32,

**6-10-3. உன் ஜீவன் தப்ப ஓடிப்போ :-**

தன்னுடைய ஆவி, ஆத்துமாவை, இரட்சித்துக் கொள்ளுவதற்காக தன் சரீர ஜீவனை இழந்து போகிறவன், அதை உயிர்தெழுதலில் மீண்டும் பெற்றுக்கொள்ளுகிறான் ; ஆனால் தன் சரீர ஜீவனை மட்டும் காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்கிறவன், அதை தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் இழந்து போகிறான் .

Gen_19:17, Luk_17:33,

**6-10-4. பின்னிட்டு பாராதே:-**

மேல் வீட்டில் இருக்கிறவன் கீழ் வீட்டிற்கு பின்னிட்டு திரும்பாதிருக்கக்கடவன்.

மேல் வீட்டில் பெற்றுக் கொண்ட பரிசுத்த ஆவியின் ஆவிக்குரிய அனுபவத்தில் இருப்பவர்கள், தங்களுடைய பழைய புளித்தமாவின் ஆவிக்குரிய அனுபவத்திற்கு பின்னிட்டு திரும்பிப் பார்க்க வேண்டாம். Gen_19:17, Luk_17:31,

### 6-10-5. பின்னிட்டு பாராதே:-

வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்கு பின்னிட்டு திரும்ப வேண்டாம்.

தேவனுக்கு ஊழியம் செய்கிறவர்கள் தங்களுடைய நீதியின் கிரியைகளை சபையில் விவரித்து, அதனால் கிடைக்கும் பட்டம், பதவிகளை பெற்றுக் கொள்ளுவதற்காக மீண்டும் சபைக்கு திரும்பாதிருக்கக்கடவன். Gen_19:17, Luk_17:31,

### 6-10-6. பின்னிட்டு பாராதே:-

தேவனுடைய வார்த்தைகளுக்கு உன் ஆவி ஆத்துமாவில் புற முதுகு காட்டாதே.

தேவனுடைய இரட்சிப்பின் ஆசீர்வாங்களை பெற்றுக்கொண்டவர்களில் சிலர், தங்கள் மனம் விரும்பிய காரியங்களுக்காக, தங்கள் முகத்தை திருப்பிக் கொண்டு, தேவனுடைய வார்த்தைகளுக்கு தங்கள் முதுகை காட்டுவார்கள்; எனவே, இவர்கள் தங்களுடைய ஆபத்து நாளில் தேவனுடைய முகத்தை தேடும் போது; தேவன் அவர்களுக்கு தம்முடைய முதுகை காட்டுவார்; ஆகையால் இவர்கள் எல்லாத இடங்களிலும் தோல்வியடைந்து புற முதுகு காட்டி ஓடுவார்கள்.

2Ch_29:6, Luk_9:61-62, Jer_2:27, Jer_32:33-34, Eze_8:16-18 , Act_7:38-41, Jer_48:39, Exo_23:27, Jer_18:17, Jos_7:8, Jos_7:12,

### 6-10-7. இந்த சம பூமியில் எங்கும் நில்லாதே:-

ஆவிக்குரிய காரியங்களில் மற்ற ஜனங்களைப் போல இருக்காதே!

ஆவிக்குரிய காரியங்களில் மற்ற சாதாரண ஜனங்களைப் போல இருக்காமல், கன்மலையாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளுக்கு ஓடிப்போகிறவர்கள், தேவனுடைய நியாயத்

தீர்ப்பிலிருந்து தப்புவிக்கப்படுவார்கள்; சாதாரண ஜனங்களைப்போல ஆவிக்குரிய காரியங்களில் நிலைத்திருப்பவர்கள், தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கு நியமிக்கப்படுவார்கள். Gen_19:17, Luk_17:35,

### 6-10-8. இந்த சம பூமியில் எங்கும் நில்லாதே!

ஆவிக்குரிய காரியங்களில் மற்ற ஜனங்களைப் போல இருக்காதே!

பொதுவாக எல்லா ஜனங்களைப் போல இந்த பூமியில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்குள்ளே யாருடைய ஆவி, ஆத்துமா, கன்மலையாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளுக்கு ஓடிப் போகிறதோ, அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பு விக்கப்படுவார்கள். சாதாரண ஜனங்களைப் போல ஆவிக்குரிய காரியங்களில் தூங்கிக் கொண்டிருப்பவர்கள் தேவனுடைய நியாயத் தீர்ப்பிற்கு நியமிக்கப்படுவார்கள். Gen_19:17, Luk_17:34,

### 6-10-9. நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ:-

யூதேயாவில் இருப்பவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக் கடவர்கள்.

தேவனுடைய வார்த்தைகளையும் தேவனுடைய ஆசரிப்பு முறைகளையும் பின்பற்றுகிறவர்கள் ஆவி, ஆத்துமாவில் பின்னிட்டு திரும்பிப் பார்க்காமல், கன்மலையாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள். Gen_19:17, Mat_24:16,

### 6-10-10. நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ:-

மற்ற பட்டணங்களிலிருந்து மலைகளுக்கு ஓடிப்போக விரும்புகிறவர்கள், யூதேயாவின் மலைகளுக்கு ஓடிப்போகாமல் தங்கள் மனம் விரும்பின இடங்களுக்கு ஓடிப்போகிறார்கள்.

மற்ற பட்டணங்களிலிருந்து மேலான ஆவிக்குரிய நிலைகளுக்கு முன்னேற விரும்புகிறவர்கள் கன்மலையாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளுக்கு ஓடிப்போகாமல் மற்றவர்கள் மூலம் கேள்விப்படுகிற கீழே குறிப்பிட்ட பல இடங்களுக்கு ஓடிப்போகிறார்கள்.

1. கிறிஸ்து வனந்தாரத்திலே இருக்கிறார்.

2. கிறிஸ்து இங்கே இருக்கிறார்.

3. கிறிஸ்து அங்கே இருக்கிறார்.

4. கிறிஸ்து அறை விட்டிலே இருக்கிறார்.

இப்படி அவர்கள் கேள்விப்படுகிற பல இடங்களுக்கு சென்று, அந்திக் கிறிஸ்து மற்றும் கள்ளத் தீர்க்க தரிசிகளின் வஞ்சிக்கிற ஆவிகளுக்கு அடிமைப்படுகிறார்கள்.

### 6-11-0. தகப்பனாலே கர்ப்பவதிகளாகி பிள்ளைகளைப் பெற்ற லோத்தின் இரண்டு மகள்கள்.

**ஆவியின்படி பொருள் :-**

புதிய ஏற்பாட்டு சபையாகிய ஸ்திரிகள் பழைய ஏற்பாட்டு நீதிமான்களின் கிரியைகளை பின்பற்றி புளித்தமாவின் உபதேசங்களை உருவாக்குகிறார்கள்; லோத்தின் நாட்களில் நடந்ததுபோல மனுஷக்குமாரன் வெளிப்படும் நாட்களிலும் சபைகளில் புளித்தமாவின் உபதேங்களை ஒவ்வொரு நாளும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். Gen_19:36-38, Amo_2:6-7, 1Co_5:1-6,

### 6-12-0. மோவாப் தேசத்தின் குடிகளுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு

மோவாப் தேசத்தில் குடியிருப்பவனே! நீ தேவனுடைய நியாயத்தீர்ப்பின் எக்காள சத்தத்திற்கு கீழ்படியாமல் விலகி புற முதுகு காட்டி ஓடும்போது 1. திகில் 2. படுகுழி 3. கண்ணி 4. அக்கினி

ஜுவாலை 5. சிறையிருப்பு ஆகிய ஐந்து நியாயத்தீர்ப்புகள் உனக்கு நேரிடும். Jer_48:39-42, Jer_48:43-44, Jer_48:45-47, Isa_24:16-20, Num_21:26-31,

**ஆவியின் படி பொருள் :-**

கள்ள தீர்க்கதரிசன வெளிப்பாடுகளில் குடிகொண்டிருந்து, தேவனுடைய நியாயத்தீர்ப்பின் எக்காள சத்தத்திற்கு கீழ்படியாமல் விலகி, தேவனுடைய சமுகத்தை விட்டு வெளியே ஓடி, அனுதினமும் தேவனுடைய வார்த்தைகளை சிலுவையில் அடித்து, அனுதினமும் தேவனுக்கு கோபம் உண்டாக்குகிறவர்களே உங்களுக்கு, கீழே குறிப்பிடுகிற ஐந்து வகையான தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் வெளிப்படும். Jer_23:14-17, Rev_11:8, Heb_6:4-9, Isa_65:2-5,

1. திகிலின் சப்தம்:-

தேவனுடைய நியாயத்தீர்ப்பின் எக்காள சத்தம் உங்களுக்கு அறிவிக்கப்படும். Amo_3:6-8, Hos_8:1-3, Isa_58:1-2,

2. படுகுழியில் விழுதல்:-

ஆவி, ஆத்துமா, பாதாள வல்லமையின் படுகுழியில் அகப்பட்டு மரணமடையும் Psa_30:3, Psa_40:1-3, Psa_49:14-15, Psa_88:1-18, Isa_38:18-20, Lam_3:37-47, Job_33:29-30,

3. கண்ணியில் அகப்படுதல் :-

ஆவி, ஆத்துமா, வஞ்சிக்கிற ஆவிகளின் தந்திரங்களுக்கு அகப்பட்டுக் கொள்ளுதல்

4. அக்கினி ஜுவாலையில் அகப்படுதல் :-

ஆவி, ஆத்துமா, பிரசவ வேதனைப்படுகிற ஸ்திரியின் இருதய வேதனையை அனுபவித்துக் கொண்டிருப்பது

5. சிறையிருப்பிற்கு தள்ளப்படுதல்:-

தங்களுடைய மன விருப்பங்களுக்கு அடிமையாக இருக்கும் படி தள்ளப்படுதல்.

6-12-1. மோவாப் தேசத்தின் குடியானவனே! நீ திகிலின் சத்தத்திற்கு விலகி, புறமுகுது காட்டி ஓடும்போது படுகுழியில் விழுவாய்

**ஆவியின் பொருள்:-**

கள்ள தீர்க்கதரிசன வெளிப்பாடுகளில் நிலை கொண்டிருப் பவனே! உன்னுடைய ஆவி, ஆத்துமா தேவனுடைய நியாயத்தீர்ப்பின் சத்தத்திற்கு கீழ்படியாமல் விலகி, தேவனுடைய சமூகத்தை விட்டு வெளியே ஓடுகிறபோது, அனுதினமும் தேவனுடைய வார்த்தைகளை சிலுவையில் அடித்து, அனுதினமும் தேவனுக்கு கோபம் உண்டாக்குகிறாய்; இப்பொழுது உன்னுடைய கள்ள தீர்க்கதரிசன வெளிப்பாடுகளினால், உன்னுடைய ஆவி, ஆத்துமாவை, நீயே கொலை செய்து, இரண்டாவது முறை ஆவியில் மரணமடைந்து, தேவனிடத்திலிருந்து நீ பெற்றுக்கொண்ட இரட் சிப்பை இழந்து மீண்டும் பாதாள வல்லமைக்கு அடிமைப்படுகிறாய். உன்னுடைய சரீர மரணத்திற்கு முன்பு, நீ தேவனுடைய நியாயத் தீர்ப்பின் செய்திக்கு கீழ்படிந்து, உன்னுடைய கள்ள தீர்க்கதரிசனங் களிலிருந்து வெளியே வந்து மனந்திரும்பும்போது, மீண்டும் தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக்கொண்டு பாதாள படுகுழியின் வல்லமையிலிருந்து தப்புவிக்கப்படுவாய்.

6-12-2. மோவாப் தேசத்தின் குடியானவனே! நீ படுகுழியிலிருந்து ஏறும்போது கண்ணியில் அகப்படுவாய்.

**ஆவியின்படி பொருள் :-**

கள்ள தீர்க்கதரிசனங்களின் வெளிப்பாடுகளில் நிலை கொண்டிருப்பவனே, உன்னுடைய ஆவி, ஆத்துமா, தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கு கீழ்படியாமல் விலகி ஓடினபடியால், நீ தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட இரட்சிப்பை இழந்து, பாதாள வல்லமையின் படுகுமுயில் விழுந்து விட்டாய், இந்த நிலையில் நீ,

தேவனுடைய நியாயத்தீர்ப்பின் செய்திக்கு கீழ்படிந்து தேவனிட மிருந்து மீண்டும் இரட்சிப்பை பெற்றுக் கொள்ளாமல்; உன்னுடைய சுயமான முயற்சியினால் உன்னுடைய ஆவி, ஆத்துமாவை நீயே, பிழைக்க வைக்க முயற்சி எடுக்கிறபோது, அந்த முயற்சிகள் உன்னுடைய ஆவி, ஆத்துமாவை, வஞ்சிக்கிற ஆவிகளின் தந்திரங்களுக்கு வழி நடத்திச்சென்று புளித்தமாவின் உபதேசத்திற்கு உன்னை அடிமைப்படுத்துகிறது.

6-12-3. மோவாப் தேசத்தின் குடியானவனே, நீ தேவனுடைய தண்டனைக்கு தப்ப புறஜாதிகளிடம் அடைக்கலம் தேடி ஓடுகிறபோது, அக்கினி ஜூவாலையிலும், அக்கினியிலும் விழுவாய். Jer_48:45, Num_21:26-28,

**எழுத்தின்படி பொருள்** :- மோவாப் தேசத்தில் குடியிருப்பவன் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் தண்டனைக்கு தப்பித்துக் கொள்ளுவதற்காக, ஜாதிகளின் நிழலில் அடைக்கலமாக வந்து சேருகிறபோது, அவர்களிடமிருந்து அக்கினி ஜூவாலையும், அக்கினியும் புறப்பட்டு மோவாபின் எல்லைகளையும், அதில் கலகம் செய்கிறவர்களின் உச்சந்தலையும் பட்சிக்கும்.

### ஆவியின்படி பொருள் :-

கள்ள தீர்க்கதரிசன வெளிப்பாடுகளின் நிலை கொண்டிருப்பவன், தேவனுடைய நியாயத்தீர்ப்பின் தண்டனைக்கு தப்பித்துக் கொள்ளுவதற்காக ஜாதிகளின் ஆசரிப்பு முறைகளைப் பின்பற்றி அவைகளினால் அடைக்கலம் தேடி ஓடுகிறபோது; அவைகளினால் தங்கள் இருதயத்திலிருந்து அக்கினி ஜூவாலைக்கு ஒப்பான வேதனையை ஏற்படுத்தும் வார்த்தைகளும், அக்கினியைப் போல கடுங்கோபத்தின் வார்த்தைகளும் எழும்பி, தங்களுடைய கள்ள தீர்க்கதரிசன முடிவையும், பதவிகளுக்காக போட்டியிடுகிறவர்களின் பெருமையையும் வெறுமையாக்கும்.

புற ஜாதிகளின் ஆசரிப்பு முறைகளிலிருந்து / புற ஜாதிகளின் அரசியல் அதிகாரத்திலிருந்து அக்கினி ஜூவாலையும், அக்கினியும் புறப்படுகிறது Jdg_9:15, Jdg_9:19-20, Jer_11:16, Jer_22:11-14, Eze_17:1-10, Eze_19:10-14, Isa_50:10-11,

6-12-4 மோவாப் விக்கிரகங்களை பின்பற்றின படியால் அவர்கள் குமாரரும், குமாரத்திகளும் சிறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். Num_21:29-30 Jer_48:46-47,

**எழுத்தின்படி பொருள் :-**

தேவனுடைய ஜனங்கள் என்ற பெயரை பெற்றுக் கொண்டு, நீங்கள் விக்கிரங்களை பின்பற்றுகிறபடியால், உங்கள் குமாரரும் குமாரத்திகளும் அந்த விக்கிரங்களுக்கே அடிமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**ஆவியின்படி பொருள்:-**

தேவனுடைய ஜனங்கள் என்ற பெயரை பெற்றுக்கொண்டு, நீங்கள் உங்கள் இருதயத்தில் பொருளாசையாகிய விக்கிரங்களை யும், பதவிகளின் விக்கிரங்களையும் பின்பற்றுகிறபடியால், உங்களை யும், உங்களைப் பின்பற்றுகிறவர்களையும் அவைகளுக்கே, அடிமை யாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

Isa_2:5-11, Eze_14:1-8, Hos_14:1-3, Hos_13:10-16, Eph_5:5, Isa_48:1-2, Isa_58:1-2,

7-0 மனுஷக்குமாரனின் வருகையில் தெரிந்து கொள்ளப் பட்டவர்களின் பங்களிப்பு

Mat_10:23, Mat_24:27-31, Mar_8:34-38, Mar_13:19-27, Mar_14:60-64, Luk_9:23-27, Luk_12:40-48, Luk_12:32-40, Luk_17:20-26, Luk_17:26-37, Luk_21:22-36,

தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் அநேகர் கள்ள தீர்க்க தரிசிகளாகவும், அந்திக் கிறிஸ்துக்களாகவும் மாறி தெரிந்து கொள்ளபட்டவர்களையும் வஞ்சிக்க முயற்சி செய்வார்கள்

Mat_24:1-14, Mat_24:15-26, Luk_21:5-9, Luk_21:10-22,

8-0. மனுஷக்குமாரனின் இராஜ்ஜியம் உங்களுக்குள்ளே இருக்கிறது. Mat_13:34-43, Mat_16:24-28, Mat_19:27-28, Mat_20:20-28, Mat_25:31-39, Mat_25:40-46, Luk_12:8-10, Luk_13:22-30, Luk_22:63-71,

# முடிவுரை

மனச் சாட்சியின் மூலம் தேவனை அறிந்தவர்கள் அவருக்கு துதி, கனம், மகிமை ஆகியவைகளை செலுத்தி ஆவியில் பிழைப் பார்கள். Rom_1:17-21, Gal_3:10-12, Eze_20:11, Rom_10:6, Lev_18:5,

மனச்சாட்சி மூலம் தேவனோடு தொடர்பு கொள்ளும் வழி முறைகளிலிருந்து திசை மாறி, தேவனுக்கு துதி, கனம், மகிமை செலுத்தாதவர்களுக்கு நியாயப்பிரமாணத்தில் சொல்லப்படட் எல்லா சாபங்களும் வந்து அவர்களுக்கு பலிக்கும். Rom_1:22-32Eph_4:17-19,

தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளாதவர்கள் மற்றும் தேவனுடைய சித்த்தை விட்டு வழிவிலகுகிறவர்கள் வஞ்சிக் கிற ஆவிகளுக்கும் பிசாசின் உபதேசங்களுக்கும் அடிமைப்பட்டு தேவ ஆசீர்வாதங்களை இழக்கிறார்கள். 1Ti_4:1-9, 2Ti_2:7-19,

வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைபாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்.

நான் உங்கள் மேல் காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்துக்குச் செவி கொடுங்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ, நாங்கள் கேட்கமாட்டோம் என்கிறார்கள். ஆகையால் ஜாதிகளே கேளுங்கள்; சபையே, அவர்களுக்குள் நடக்கிறதை அறிந்து கொள். பூமியே, கேள்; இந்த ஜனங்கள் என் வார்த்தைகளைக் கேளா மலிருந்து, என் நியாயப்பிரமாணத்திற்குச் செவிகொடாமல் அதை வெறுத்து விடுகிறார்கள்; அவர்கள் மேல் நான் அவர்கள் நினைவு களின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன். Jer_6:16-19,

இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் மூலம் தேவனுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை பெற்றவர்களின் மூன்று நிலைகள்.

1-0 தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்

2-0 தேடுகிறவர்கள்

3-0 மற்றவர்கள் Rom_11:7,

1-0. தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் :-

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தேவ நீதியை அடைந்திருக்கிறார்கள். 1Co_8:3, 2Co_16:9, 2Ti_2:10, 2Ti_2:19, Tit_1:3, Rom_8:28-33, Rom_9:6-30 ,Joh_6:39

2-0. தேடுகிறவர்கள் :-

தேவ நீதியை தேடுகிறவர்கள் கிழே குறிப்பிடுகிற பல காரணங்களினால் ஆவிக்குரியவைகளில் இடறி விழுந்து கொண்டிருக்கிறார்கள்.

1. தேவ நீதியைத் தேடாமல் தங்கள் சுய நீதியை நிலை நிறுத்த முயற்சி செய்தல். Mat_6:33 Rom_10:1-3,

2. நியாயப்பிரமாண நீதியின் கிரியைகளின் மூலம் நீதிப் பிரமாணத்தை தேடுவது. Rom_9:31-33,Gal_5:4-6,

3. முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவரு டைய நீதியையும் தேடாமல், பரலோகத்தில் வாசல் கதவுகளை தொடர்ந்து தட்டிக்கொண்டிருப்பது. Luk_13:23-30,

4. தேவனுடைய சித்தத்தை செய்யாமல் தங்களது தேவை கள் சந்திக்கப்பட்ட தேவனிடம் கேட்பது. Mat_7:22-23, Isa_1:10-15,

5. முதலாவது தேவனுடைய நீதியைத்தேடாமல் தங்கள் சுய விருப்பங்களை தேடி அவைகளை அடையும் படி தேவனை நோக்கி

கேட்பது. 1pe_2:6-8, Rom_9:32-33, Isa_8:11-16, Isa_28:14-15, Mat_21:44, Luk_20:18, Jer_5:1-5,

6. மூலைக்கல்லில் இடறுவதற்கு அறியாமைதான் மூலக்காரணம் ஏனென்றால் அவர்கள் தேவ அறிவை வெறுத்தார்கள். Hos_4:6, 1Sa_5:13-14, Mal_2:1-9, Jer_23:22, Mat_22:29, Mar_12:24, 1Co_8:1-2, Ecc_1:18, Ecc_12:12,

7. ஆவிக்குரிய வாழ்க்கையில் நற்கிரியைகள் இல்லாத பொழுது அறியாமையின் ஆழத்திற்கு செல்வது. Gal_5:6, Jam_2:17-26, Mat_25:24-30, Luk_19:20-27, Mat_22:9-14,

8. இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் உடன் படிக்கையின் மூலம் நற்கிரியைகள் செய்யும் போது அவைகள் எந்த ஒரு மனிதனையும் எந்த சூழ்நிலையிலும் தேவ நிதியை அடைய வழி நடத்தும்.

3-0 மற்றவர்கள் :- Rom_11:8-10, Psa_69:21-28, Act_1:16-20, 1Pe_2:1, 1Pe_3:1, Jud_1:1,

சூதும் வஞ்சகமுமான தந்திரமுள்ள போதகமாகிய பல விதமான காற்றுகளைப் பின்பற்றாமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு, தேவன் ஒவ்வொரு அவயவங்களுக்கும் பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப் பிரமாணத்தில் நிலைத்திருந்து, முழு சரீர வளர்ச்சியை ஏற்படுத்தி தேவ சித்தத்தை நிறைவேற்றுவதினால் தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள முடியும் Eph_4:14-16,

இரு மனமாகிய சந்தேக காற்றை பின்பற்றாமல் ஒரு மனமாகயிருந்து முழு விசுவாசத்துடன் நற்கிரியைகள் செய்து தேவ ஞானத்தை சுதந்தரித்துக்கொள்ள முடியும் Jam_1:5-8, Jud_1:12,

இந்த நாள் வரைக்கும் காட்டுக் கழுதைகள் போல தங்கள் மதவெறியின் போதகத்தை பின்பற்றி தன் இச்சையாக திரிந்து கொண்டிருப்பவர்கள் தங்களுடைய ஆவி, ஆத்துமாவில், அறிவு,

புத்தி, ஞானம், இவைகளைக் கொடுத்து, தங்களை வழி நடத்துகிற உன்னதமான தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து அன்புடன் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். Jer_2:24, Jer_14:6, Hos_8:9, Job_39:5-8,

இந்நாள் வரைக்கும் இவர்கள் தேவ நீதிக்கு கீழ்ப்படியாமல் தங்கள் மனதை கடினப்படுத்தியிருக்கிறார்கள், இவர்கள் நியாத் தீர்ப்புக்கு தப்புவதில்லை இவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து எப்பொழுது தீமை செய்வதிலிருந்து மனந்திரும்பு கிறார்களோ அப்பொழுது அவர்கள் மீண்டும் தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியும். ஆமென். Jer_2:24, Jer_14:6, Hos_8:9, Job_39:5-8.



இந்து முறைப்படி பூசாரி வம்சத்தில் பிறந்து பெற்றோர் என் சிறுவயதிலே மரணமடைந்ததால், வறுமையின் காரணமாக கோவையில் உள்ள ஒரு அநாதை இல்லத்தில் கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்டு, கடந்த முப்பது வருடங்களாக தேவ வார்த்தைகளைக் கண்டு, கேட்டு, உணர்ந்துகொண்டபடியால் ; பரலோக இராஜ்ஜியத்தின் உவமைகளின் இரகசியங்களின் நன்மை தீமைகளை பகுத்தறிவதின் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை புசித்து ஆவி, ஆத்துமாவில் மறுரூபடைந்தேன்.

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகங்களின் தலைப்புகள்

**1. பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் நின்று கொண்டிருக்கிறது**

**2. தேவனுடைய வீட்டிலே நியாயத்தீர்ப்பு துவங்குகிறது**

**3 தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி**

**4. கிறிஸ்துவின் ஜீவ அப்பங்களை புசிக்கும் மூன்றுவகையான ஜனங்கள்**

**5. ஆவி,ஆத்துமாவின் மறுபிறப்பும் சரீரத்தின் உயிர்தெழுதலும்**

**6. நித்திய ஜீவ வார்த்தைகளினால் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து**

**7. தேவனுடைய வெளிப்பாடுகளின் மூல உபதேசங்கள்**

**8. தேவனுடைய வெளிப்பாடுகளின் நீதியின் உபதேசங்கள்**

**9. பூமியின் நான்கு திசைகளிலிருந்து நான்கு வகையான விசுவாசங்கள்**

**10. இந்த மனுஷகுமாரன் யார்?**

**11. ஆவிக்குரிய இஸ்ரவேலர்களின்/யூதர்களின் அடையாளங்கள்**

**12 . தேவனும் மனிதனும் கேட்ட எட்டு கேள்விகள்**

இந்த தேவனுடைய வார்த்தைகளின் தலைப்புக்களின் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து சமைக்கப்பட்டு இந்த புஸ்தகத்தில் புசிக்க ஏற்றபடி / அவரவர் உட்கொள்ளும் அளவுக்கேற்றபடி / தன்மைக்கேற்றபடி பரிமாறப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தேவனுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் இந்த விருந்தை புசிக்க அபாத்திராக போனார்கள். ஆனால் தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள் ஒரு சிலர் இயேசு கிறிஸ்து ராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில் கலந்து கொண்டு இந்த தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை பல ருசியுள்ள தேவ வார்த்தைகளின் தலைப்புகளாக புசித்து, அதன் சுவைகளை உணர்ந்து கொண்டபடியால், ஆவி, ஆத்துமாவில் மறுரூபமடைந்து, தங்களுக்கு கொடுத்த தேவ சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம் ஜெயங்கொள்கிறவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துகிறார்கள்.

அவர்கள் தங்களுக்கு வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொண்டு பரலோக இராஜ்ஜியத்தின் ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்கும் மணவாளனாகிய கிறிஸ்துவுடன் தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுகிறார்கள்.